IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.414/2025
DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MAGESHWARAN |
| FATHER'S NAME | : | EGAMBARAM |
| VILLAGE | : | TK PURAM |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 01$^{ST}$ day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் ஆனதால் குவிமுச 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.07.2022 ம் தேதி காட்பாடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் லெனின் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சுபாஷினி க/பெ வேல்முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்த புகார் மனுவை பெற்று அதற்கு அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.254/2022, சட்டப்பிரிவு 341, 294(பி), 506(2), இதச மற்றும் 4 of TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து கணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் 08.07.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பிரித்விராஜ் மற்றும் பிரபு ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். அது முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 15.07.2022 ம் தேதி எதிரியை காரணம் கூறி கைது செய்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பெருமாள் மற்றும் ராமசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த SKODA RAPID CAR(WHITE COLOUR) பதிவு எண்TN23 CA71111 காரை கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். பின்னர் வழக்கு சொத்தான SKODA RAPID CAR(WHITE COLOUR) பதிவு எண்TN23 CA71111 காரை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம்–91 **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.பின்னர் வழக்கு சொத்து SKODA RAPID CAR(WHITE COLOUR) பதிவு எண்TN23 CA71111 அ.சா.

பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் சுபாஷினி, பாபு, நதியா, பிரபு, பிரித்விராஜ், பெருமாள், ராமசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் சட்டப்பிரிவை 341, 294(பி), 506(2), இதச மற்றும் 4 of TNPHW Act ல் இருந்து 341, 294(பி), 506(2), 307 ஆக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் சட்டப்பிரிவை மீண்டும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டப்பிரிவை 341, 294(பி), 506(2), 307 ல் இருந்து 341, 294(பி), 506(2) இதச பிரிவு மற்றும் r/w 4 of TNPHW Act ஆக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 341, 294(பி), 506(2) இதச பிரிவு மற்றும் r/w 4 of TNPHW Act பிரிவின் படி 25.07.2022 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

சொன்ன நேரம் தேதியில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 01.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.